**கவனிக்க.**- *13.02.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *மற்றும் பகுதி* IV(*அ*) *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1851 - 2014 පෙබරවාරි මස 21 වැනි සිකුරාදා - 2014.02.21

*1851 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(*ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.*)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 214 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 218 |

**கவனிக்க.**- *றோயல் புண்ணியமைப்பு மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2014, சனவரி மாதம் 31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2014, மாச்சு மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, பெப்புருவரி 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - இரத்தினபுரி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, மாச்சு மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, பெப்புருவரி 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| இரத்தினபுரி | குருவிற்ற | எரத்ன பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் குருவிற்ற கோரளை விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், இரத்தினபுரி |

1-647

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, பங்குனி மாதம் 21 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, தை 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | ரிதீகம | மாதுர கோரளை பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வாவுடவில்லி ஹத்பத்துவ பிரிவில் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், குருநாகல் |

**அட்டவணை "ஆ"**

குருநாகலை மாவட்டத்தின் ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவின் மாதுரே கோறளையின் தெற்கு பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவு

மாதுரே கோறளையின் தெற்கு பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவில் பின்வரும் கிராமங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது :-

கிராம பட்டியல்

1. பல்லேகந்த
2. சியம்பலாஎல்ல
3. தெல்விட்ட
4. மல்மிவல
5. வல்தெனிய
6. பதபரே
7. கிதுல்வல
8. பன்னகம/பின்னகொல்ல
9. தெல்ஹேனவத்த
10. ஜங்குரே
11. முவன்தெனிய
12. மாயாமுல்ல/மகுல்அல்லிய
13. வல்அரம்ப
14. கல்லனவத்த
15. துனுமாவ
16. கிதுல்கொல்ல
17. வெலேகம்மெத்த
18. பம்பரகஹகந்த
19. இங்குருகொல்ல
20. உடமுல்ல
21. உடகந்த
22. கலுகஹதென்ன
23. கல்லவ
24. எகொடமுல்ல
25. ஈரியகொல்ல
26. கலமடுவாவ
27. மிரிஸ்சல
28. தென்னேகம்மெத்த
29. குபுகந்த
30. கல்பிந்தின எல
31. அம்பதென்ன
32. கனதெனியாவல
33. வலவ்வத்த
34. கலகம
35. பின்னபொத
36. மதுருபிடிய
37. எஸ்பொத
38. இஹலகம
39. கெப்பிடிகல குடியேற்றம்
40. தொடன்தலாவ
41. பொல்கொல்ல
42. ரணமுகயாதென்ன
43. வெலிஹிரிய
44. கந்தேகம
45. கொட்டகெதர
46. மீலியத்த
47. இஹலகம
48. கொஸ்கொல்ல
49. வேகம
50. வேகமகந்த
51. கொஸ்கொல்லவத்த
52. மஹவெல
53. அகலகமுவ
54. பாதெனிய
55. கனேகொட
56. தொம்பகொல்ல
57. மியனதெனிய
58. வலகம
59. வெவதென்ன
60. அருணோதாகம
61. கோணிகொட
62. தெஹிகஸ்பிடிய
63. கலஓட்டுவாவ
64. மாஸ்பொத
65. பத்தல்கொட
66. பிஹிம்புவ
67. மால்பே
68. நுங்கமுவ
69. உடுமுல்ல
70. கந்தேகெதர
71. பாம்பொருவ
72. ரன்ஹெட்டிகந்த
73. இஹல ஒகொடபொல
74. பஹல ஒகொடபொல
75. நெலவுல்ல
76. நெலவுல்லவத்த
77. நிஹிருவ
78. பல்தெனிய
79. பாராகொட
80. இகிரிவத்த

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, பங்குனி மாதம் 24 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, தை 29.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | முலட்டியன | தெய்யன்தர பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கங்கபடபத்துவ பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தறை |
| மாத்தறை | வெலிகம | மீரீஸ்ஸ பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வெலிகம கோரளை பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தறை |

2-498

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, பங்குனி மாதம் 21 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, தை 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | மீரிகம | தெபரகஹர பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் சியானா கோரளை கிழக்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கம்பஹா |

2-499

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, பங்குனி மாதம் 21 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, தை 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | அத்தனகலை | எகொடபெத வடக்குப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் சியனே கோரளை கிழக்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கம்பஹா |

2-500

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக பட்டப்படிப்பு பயிற்சி (ஆண்/பெண்)

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு பயிற்சிக்காக பொருத்தமான தகுதிவாய்ந்த இலங்கையரிடம் இருந்து (ஆண்/பெண்) விண்ணப்பங்கள் 2014, பெப்புருவரி 02 ஆந் திகதி முதல் 2014, மாச்சு 02 ஆந் திகதிவரை கோரப்படுகின்றன.

2. பட்டதிட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் நூற்கல்வி மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு 1981 ஆம் ஆண்டின் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் இல. 68 மற்றும் மேலும் பின்தொடரப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றினால் பட்டங்கள் வழங்குவதற்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

3. இப்பயிலுனர்களுக்கு பிரயோகிக்கத்தக்க பட்டதிட்டங்கள் மருத்துவ பிரிவுக்கு ஐந்து வருட காலத்தையும் எந்திரவியல் பிரிவுக்கு நான்கரை வருட காலத்தையும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணனி விஞ்ஞானம் மற்றும் சட்டம் ஆகிய பிரிவுகளுக்கு நான்கு வருட காலத்தையும் முகாமைத்துவ, தொழில்நுட்ப சேவைகள், தேவைகள் விநியோகங்கள் ஒழுங்கமைப்பு முகாமைத்துவம் மற்றும் சமூக கற்கைகள் ஆகிய பிரிவுகளுக்கு மூன்று வருட காலத்தையும் கொண்டிருக்கும்.

3.1 தெரிவுக்காக நடாத்தப்படும் மூன்று நேரடி பரீட்சைகளில் பெறப் பட்ட சராசரி புள்ளிகளினதும் மற்றும் ஒவ்வொரு படைப் பிரிவுகளிலும் தேவைப்படும் வெற்றிடங்களினதும் மீது மூன்று படைகளுக்கான பயிலுனர்களின் ஒதுக்கீடு அடிப்படையைக் கொண்டிருக்கும். பட்டதிட்டங்களை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் இலங்கை தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளில் பயிலுனர்கள் பாரப்படுத்தப் படுவார்கள்.

3.2 பட்ட திட்டங்களின் நூற்கல்வி மற்றும் இராணுவ பயிற்சிக் கூறுகளை வெற்றிகரமாக முடிக்கின்றதன் மீது, பிரயோகிக்கத்தக்கவாறு மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையில் இளமாணி (எம். பி. பி. எஸ்.), பொறியியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், கணினி விஞ்ஞானம் மற்றும் சட்டத்துறைகள் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானம் ''லொஜிஸ்ரிக்'' முகாமைத்துவம் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகியவற்றில் விஞ்ஞான இளமாணி (பி. எஸ். சீ.) பட்டம் அல்லது சட்டத்தில் இளமாணி ஆகிய உத்தியோக பயிலுனர்களுக்கு வழங்கப்படும்.

3.3 சகல பட்ட திட்டங்களும் ஆங்கில மொழியில் நடாத்தப்படும்.

3.4 தெரிவுசெய்யப்படும் தேருனர்கள் பின்வரும் இளமாணி பட்டத்திட்டங்களில் ஒன்றை பின்பற்ற வேண்டும் :-

(அ) **மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையில் இளமாணி (எம். பி. பி. எஸ்.) - ஐந்து வருட பாடநெறி (ஆண்/ பெண்).**- 2013 இல் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் (உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல்) மூன்று (3) பாடங்களில் சித்தி அடைந்ததுடன் பல்கலைக்கழக அனுமதி (ஆம்) உடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் ஆவர்.

(ஆ) **சிவில்/பொறிமுறை மின் மற்றும் இலத்திரனியல்/ உயிர் விஞ்ஞானம் (Bio-Medical) மற்றும் எந்திர மின்னணுவியல் (Mechatronic) இலத்திரனியல்/ இலத்திரனியல் மற்றும் தொலைதொடர்பு/ கடல் சார்/விமானம் பராமரிப்பு (Air Craft Maintenance) மற்றும் விமான இயந்திரவியல் ஆகிய பிரிவுகளில் இளமாணி (பி. எஸ். சீ.)** - நான்கரை வருட பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (ஆண்கள் மட்டும்)

2013/ 2012 இல் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் இணைந்த கணிதம்) மூன்று (3) பாடங்களில் சித்தி அடைந்ததுடன் பல்கலைக்கழக அனுமதி (ஆம்) உடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் ஆவர்.

(இ) **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் இளமாணி (பி. எஸ். சீ.) - நான்கு வருட பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (ஆண் மட்டும்).**- 2013/ 2012 இல் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் மூன்று (3) பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதி (ஆம்) உடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் ஆவர்.

(ஈ) **கணினி விஞ்ஞானம் (Computer Science) இளமாணி (பி. எஸ். சீ.) - நான்கு வருட பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (ஆண் மட்டும்).**- 2013/2012 இல் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் மூன்று (3) பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதி (ஆம்) உடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் ஆவர்.

(உ) **சட்டத்தில் இளமாணி (எல். எல். பி.) - நான்கு வருட பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (ஆண்/பெண்).**- 2013/ 2012 இல் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களில் ஏதாவது மூன்று (3) பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதி (ஆம்) உடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் ஆவர் :-

| | | |
|---|---|---|
| கணக்கியல் | அரசியல் விஞ்ஞானம் | கமத்தொழில் விஞ்ஞானம் |
| புவியியல் | உயிரியல் | வியாபார கற்கைகள் |
| வியாபார புள்ளி விபரவியல் | வரலாறு | பௌதீகவியல் |
| இரசாயன வியல் | பொருளியல் | உயர்தர கணிதம் |
| சிங்களம்/ தமிழ் | | சமூக விஞ்ஞான முறைகள் |
| ஜேர்மன் மொழி | ஜப்பானிய மொழி | லத்தீன் |
| பாலி | சமஸ்கிருதம் | கிறிஸ்தவம் |
| அராபி மொழி | சீன மொழி | பௌத்த நாகரிகம் |
| பௌத்தம் | கிரேக்க மொழி | பிரான்ஸ் மொழி |
| நாடக கற்கை | இந்து நாகரிகம் | கிரேக்க, ரோம நாகரிகம் |
| இந்து சமயம் | | |
| இஸ்லாம், | | தொடர்பாடல் கற்கை |
| இஸ்லாமிய நாகரீகம் | | தகவல் மற்றும் தொடர்பாடல் |
| ஆங்கிலம் (பாட இல. - 73) | | |

(ஊ) **முகாமைத்துவ, தொழில்நுட்ப விஞ்ஞானங்கள் இளமாணி (பி. எஸ். சீ.) - மூன்று வருட பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (ஆண் மட்டும்).**- 2013/ 2012 இல் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம், கணிதம் அல்லது வர்த்தக பிரிவில் ஏதாவது மூன்று (3) பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதி (ஆம்) உடையவர்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்கள் ஆவர்.

(எ) **"லொஜிஸ்ரிக்" முகாமைத்துவம், இளமாணி (பி. எஸ். சீ.) - மூன்று வருட பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (ஆண்/பெண்).**- 2013/ 2012 இல் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம், கணிதம் அல்லது வர்த்தக பிரிவில் ஏதாவது மூன்று (3) பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதி (ஆம்) உடையவர்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்கள் ஆவர்.

(ஏ) **சமூக விஞ்ஞானம், இளமாணி (பி. எஸ். சீ.) - மூன்று வருட பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (ஆண் மட்டும்).**- 2013/ 2012 இல் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம், கணிதம் அல்லது வர்த்தக பிரிவில் ஏதாவது மூன்று (3) பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதி (ஆம்) உடையவர்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்கள் ஆவர்.

3.5 தெரிவுசெய்யப்பட்ட தேருனர்கள் ஆங்கிலம், முகாமைத்துவம், சட்டம், சர்வதேச கற்கைகள் மற்றும் இராணுவ கற்கைகள் உட்பட சம்பந்தப்பட்ட பட்டத்திட்டங்கள் தொடர்பாக பலதரப்பட்டதும் பொதுவானதும் விசேடமானதுமான பாடங்களை பின்பற்றுமாறு வேண்டப்படுவர்.

3.6 தமது பட்டத்திட்டத்தின்போது, பௌதீக அபிவிருத்தி, தேகாப்பியாசம், ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொள்ளுவதற்கும் அவர்கள் வேண்டப்படுவர்.

**4. தகுதிக்கான தேவைகள்.**- தேருநர்கள் :-

(அ) இலங்கைப் பிரசையொருவராக இருக்க வேண்டும் ;

(ஆ) 2014, மாச்சு 02 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் ;

(இ) **பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதியைக் கொண்டிருப்பதுடன் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்** :

(i) சாதாரண பொது பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பாடத்திற்கு குறைந்தபட்சம் விசேட சித்தியை (சீ) கொண்டிருக்க வேண்டும்.

(ஈ) குறைந்தபட்சம் பின்வரும் பௌதீக நியமங்களைத் திருப்திப்படுத்த வேண்டும் :

| | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| உயரம் | தரைப்படை | 5'6" | 5'3" |
| | கடற்படை | 5'6" | 5'3" |
| | விமானப்படை | 5'6" | 5'4" |
| நிறை | தரைப்படை | 50 கி. கி. | - |
| | கடற்படை | 50 கி. கி. | 41 கி. கி. |
| | விமானப்படை | 17 <BMI< 25 | 17 <BMI< 25 |
| மார்பளவு | | 32" (விரியாத) | - |

**குறிப்பு**.- (விளையாட்டில் அல்லது வேறு துறைகளில் முதன்மையான சாதனைகளைத் தேருநர் கொண்டிருந்தால் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராலும் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சபையின் தலைவரினாலும் மேற்படி பௌதீக நியமங்களை தளர்த்தப்பட முடியும்.)

(உ) **அவசியப்படும் மருத்துவ நியமனங்களுக்கு இணங்குதல்**.- பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினதும் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சபையின் தலைவரினதும் திருப்திக்கு ஏற்ப மருத்துவ சோதனையொன்றில் சித்தியடையுமாறு வெற்றிகரமான தேருநர்கள் வேண்டப்படுவர்.

(ஊ) **திருமணமாகாதவர்**.- (பயிற்சியின்கீழ் உள்ள வேளைகளில் திருமணம் செய்வதற்கும் அத்துடன் படை ஒழுங்குவிதிகளின்கீழ் அவ்வாறு செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும் வரையும் பயிற்சி உத்தியோகத்தர்கள் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.)

5. **சேவையின் நிபந்தனைகள்**.- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர் பயிற்சியாளர்களாக தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவர்கள் 1981 ஆம் ஆண்டின் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் இல. 68 மற்றும் மேலும் பின்தொடரப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின்கீழ் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு உட்படுவார்கள்.

6. சம்பந்தப்பட்ட பட்டத் திட்டங்களில் பட்டத்தைப் பெற்ற பின்னர் சேர்த்துக்கொள்ளும் நேரத்தில் தெரிவுசெய்யப்பட்ட தேருனர்கள் அவர்கள் பதவிக்கு அமர்த்தப்பட்ட படையில் பாரப்படுத்தப்பட்ட பின்னர், பிரயோகிக்கத்தக்கவாறு கட்டாயமான காலமொன்றுக்கு சேவையாற்றுவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் ஒப்பந்தமொன்றையும் உடன்படிக்கையொன்றையும் செய்துகொள்ள வேண்டும்.

7. மாதமொன்றுக்கு அண்ணளவாக ரூபா 26,000 கொண்ட சம்பளமும், படியும் உத்தியோகத்தர் பயிலுனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும். இதற்கு மேலதிகமாக, உத்தியோகத்தர் பயிலுநர்களுக்கு கட்டணமின்றி பின்வரும் வசதிகள் கிடைக்கச் செய்யப்படும் :-

(i) உணவு மற்றும் தங்குமிடம்
(ii) மருத்துவ வசதிகள்
(iii) சீருடைகள்
(iv) அதிகாரியின் வேலையாள் வசதிகள்
(v) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்

8. இலங்கைத் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளுக்கு பாரப்படுத்தப்பட்டதன் மீது, சேவைக் கொடுப்பனவு சட்டக்கோவையின் பிரகாரம் வரிசைப் பதவிக்கு பிரயோகிக்கத்தக்க சம்பளமும் படியும் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.

(அ) பின்வரும் படிகள் மாதாந்தம் கொடுப்பனவுக்குரியதாகும்:-

(i) தகுதிப்படி ;
(ii) பங்கீட்டுப்படி ;
(iii) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடப்பட்டவர்களுக்கு (திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மட்டும்) ;
(iv) சீருடை பராமரிப்புப் படி.

(ஆ) பின்வரும் வசதிகள் கிடைக்கும்/படிகள் கொடுப்பனவுக்குரியதாகும் :

(i) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடும்போது இடவசதி ;
(ii) வாடகைப்படி ;
(iii) சீருடைப்படி ;
(iv) அதிகாரியின் வேலையாள் படி ;
(v) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடப்பட்டவர்களுக்கு வேலை செய்யுமிடத்திலிருந்து வீடு இருக்கும் நிலையத்துக்கு ஒரு மாதத்துக்கு ஒரு மீளத்திரும்பும் கடமை ஆணைச்சீட்டு.

9. அவர்களது சம்பள எதிர்காலங்களினதும், சேவையின் நிபந்தனைகளினதும் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகளினால் தரைப்படை/ கடற் படை/ விமானப் படையின் உத்தியோகத்தர்கள் ஆட்சிப்படுத்தப் படுவார்கள் :-

(i) தரைப்படை/ கடற்படை/ விமானப்படையின் வேதன சட்டக் கோவை ;

(ii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தரைப்படை/ கடற்படை/ விமானப்படை உத்தியோகத்தர்களுக்கான நடைமுறையிலான ஒழுங்குவிதிகள்;

(iii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறையிலான தரைப்படை/ கடற்படை/ விமானப்படை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைகள் சட்டக்கோவை.

10. பயிற்சியின்போது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தரினாலும் அத்துடன் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தளபதிகளால் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பயிற்சியை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர் பயிற்சியாளர்கள் அவசியப்படுத்தப்படுவர்.

11. பயிற்சியின் கீழுள்ள உத்தியோகத்தர், பயிற்சியாளர்கள் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் ஏதாவது ஒரு பகுதிக்கு பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு பாத்திரவாளியாவார்கள்.

12. உள்ளே வாழுமாறு வழங்கப்பட்ட இடவசதியில் வாழுமாறு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தாபனங்களினால் முன்வைக்கப்பட்ட வழக்கமான வேலை முறையைப் பின்பற்றுமாறு உத்தியோகத்தர் பயிற்சியாளர்கள் கேட்கப்படுவார்கள்.

*13.* ***மொழித் தேவைப்பாடுகள்***.– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கைக்குப் பயனை வழங்குவதற்காக ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது இதன் பின்னகத்து செய்யப்படவுள்ள ஏதாவது விதிகளுடன், ஒழுங்குவிதிகளுடன் இணங்குமாறு தெரிவு செய்யப்பட்ட தேருநர்கள் கேட்கப்படுவார்கள்.

*14.* ***ஆளடையாளத்தை நிரூபித்தல்***.– தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கான சான்றினைச் சமர்ப்பிக்குமாறு தேருநர்கள் கேட்கப் படுவார்கள். இந்நோக்கத்திற்கு ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் அல்லது தபால் மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளும் மோட்டார் வாகனங்கள் பதிவாளரினால் வழங்கப்பட் டுள்ள வாகன மோட்டார் உத்தரவுப்பத்திரமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

*15.* விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தின் www.kdc.ac.lk என்ற இணையத்தளத்தில் இருந்து விண்ணப்பப்படிவமும் விபர மஞ்சரியும் பதிவிறக்கம் செய்ய முடியும்.

*16.* மொறட்டுவை, இலங்கை வங்கி, இடம கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் "9405831" இற்கு வரவு வைக்கப்படுவதற்கு "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின்" சார்பில் இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளைக்கு ரூபா 1,000 ஐ (ஆயிரம் ரூபா) கொடுப்பனவு செய்வதன் மூலம் பெறப்பட்ட பற்றுச்சீட்டொன்று சரிவர முழுமைப்படுத்தப் பட்ட விண்ணப்பங்களுடன் இணைத்து வைத்திருக்கப் பட வேண்டும். அடிப்படைத் தகுதியற்ற விண்ணப்பதாரிகளும் சரிவரி நிரப்பப்படாததும், இத்தகவலின் நிபந்தனைகளின் பிரகாரம் இல்லாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்ப கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.

*17.* சரிவர முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பிரதியொன் றுடன் 2014, மாச்சு 02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் பதிவுத்தபாலின் மூலம் "பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், கந்தவள தோட்டம், இரத்மலானை" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் இடது மூலையின் மீது "பயிற்சிக்கான விண்ணப்பம்" மற்றும் விண்ணப்பித்துள்ள பிரிவு என்பன குறிக்கப்பட வேண்டும்.

*18.* அரசாங்க அல்லது கூட்டுத்தாபனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் தாங்கள் தெரிவுசெய்யப்படின் இப்பட்டப் படிப்புக்காக தங்களை அனுப்ப முடியும் என தொழில் புரியும் இடத்தின் தலைவரிட மிருந்து கடிதம் ஒன்றையும் பெறவேண்டும்.

*19.* பிறப்புப் பதிவின் சான்றுப்பத்திரங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உ. த.) பெறுபேற்றுத் தாள்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி (ஆம்) தகுதிக்கான சான்றுப்பத்திரத்தின் கடிதம் ஆகிய வற்றுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

*20.* ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு வினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பாய்வு மூலப்பிரமாணத்தின் பிரகாரம் அவசியப்பட்ட நியமனங்களை சாதித்த தேருநர்கள் மத்தியிலிருந்து பூர்வாங்க தெரிவுசெய்யப்படும். தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் குறித்துரைக்கப் பட்டவாறு சோதனை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்கள். ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட இறுதித் தெரிவுக்குழு வினால் இறுதித் தெரிவுசெய்யப்படும்.

*21.* நேர்முகப் பரீட்சைகளுக்கும் சோதனைகளுக்கும் தெரிவுசெய்யப் படும் தேருநர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடங்கள், நேரங்கள் மற்றும் திகதிகள் ஆகியன எழுத்தில் அறிவிக்கப்படும். இந்நோக்கத்திற்கு விண்ணப்பதாரிகளுக்கு பிரயாண அல்லது வேறு செலவினங்கள் கொடுப்பனவு செய்யப்படமாட்டாது.

*22.* தேருனர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு யாரேனும் ஒருவர் விரும்பினால், அவருக்கு நற்சான்றிதழை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்ய வேண்டும். ஏதாவது வகையில் ஆதரவு திரட்டுதல் தகைமை நீக்கமாக விளங்கும்.

*23.* விண்ணப்பங்கள் பெறுகை கிடைத்தமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களின் நிராகரிப்பு தொடர்பில் கடிதப் போக்குவரத்து அல்லது விசாரணைகள் வரவேற்கப்படமாட்டாது.

கோடாபய ராஜபக்ஷ
ஆர்டபிள்யூபீ, ஆர்எஸ்பீ, பிஎஸ்சி
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி
அமைச்சின் செயலாளர்
மற்றும்
முகாமைத்துவ சபையின் தலைவர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல
பாதுகாப்புப் பல்கலைக்கழகம்.

2–600

---

## விளையாட்டு அமைச்சு

### தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

### விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி – 2014/2015

விளையாட்டு அமைச்சின்கீழ் இயங்கும் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் சிங்கள மொழி மூலம் நடாத்தப்படும் விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாடநெறியினைப் பயிலுவதற்காக வயது 18–35 (அரச சேவையில் பணியாற்றுவோரின் வயது 45 வருடங்களினைவிட மேற்படாது இருத்தல் வேண்டும்). வருடங்களுக்கு உட்பட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்** :

1.1 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/எண்கணிதம் உள்ளிட்ட பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் 3 பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.2 அத்துடன் அவர் :

(அ) விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டுப் பெருவிழா போட்டியொன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல் அல்லது அவ்விளையாட்டு விழாவின் மாவட்ட மட்டப் போட்டியில் தனியாள் நிகழ்வு ஒன்றில் முதலாம்

இடத்தை அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றிருத்தல் அல்லது குழுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் நடாத்தப் படும் தேசியமட்ட போட்டியொன்றில் தனியாள் நிகழ்வு ஒன்றில் முதலாம் இடத்தை அல்லது இரண்டாம் இடத்தை அல்லது மூன்றாமிடத்தைப் பெற்றிருத்தல் அல்லது குழுப் போட்டியில் முதலாம் அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(இ) பாடசாலைகளுக்கிடையேயான தேசியமட்ட விளை யாட்டுப் போட்டிகளில் 16 வயதிற்கு மேற் பட்டவர்களுக்கான தனிப் போட்டியொன்றில் முதலாம் இடத்தைப் பெற்றிருத்தல், அல்லது குழுப்போட்டியில் வீரமுதன்மை வெற்றியினைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஈ) தேசிய விளையாட்டுக் குழுவொன்றின் அங்கத்தவராக தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், ஆசிய வீர முதன்மைப் போட்டிகள் ஆகிய விளையாட்டுப் போட்டிகள், பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள், உலகக் கிண்ண விளையாட்டுப் போட்டிகள் அல்லது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றியிருத்தல் ;

அல்லது

(உ) விளையாட்டு அமைச்சில் அல்லது அதன்கீழ் இயங்கும் நிறுவனங்களில் அல்லது மாகாண சபைகளின் விளையாட்டு உத்தியோகத்தர்களாக கடமையாற்றுதல் அல்லது கல்வி அமைச்சின் விளையாட்டு ஆசிரியராக அல்லது ஆசிரியையாக கடமையாற்றுதல் (குறிப்பு 1 இன் பிரகாரம் உரிய தேவைகளைப் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும்).

அல்லது

(ஊ) அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான ஆசிரியராக அல்லது ஆசிரியையாக, பயிற்றுவிப் பாளராக (தொண்டராகவும் இருக்கலாம்) இருத்தல் அல்லது இளைஞர் சேவைகள் மன்றத்தின் விளையாட்டு உத்தியோகத்தராக 5 வருட சேவைக்கால அனுப வத்தைப் பெற்று இருப்பதுடன் தேசிய விளையாட்டுச் சங்கமொன்றில் பெற்றுக்கொண்ட விளையாட்டு பயிற்றுவித்தற் படிநிலை அனுமதிப்பத்திரம் பெற்றி ருத்தல் ;

அல்லது

(எ) முப்படைகள், பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்பு பிரிவின் பயிற்சி வழங்கும் நிறுவனமொன்றில், கல்லூரியில் விளையாட்டு அல்லது உடற்பயிற்சி ஆலோசகராக 6 மாதங்களுக்குக் குறையாத ஆரம்ப மற்றும் உயர்தர பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பயின்று பூர்த்திசெய்திருத்தல்.

**முக்கிய குறிப்பு :**

1. விளையாட்டு அமைச்சின்கீழ் பணியாற்றுவோர் 1 வருட சேவைக்காலத்தினையும் கல்வியமைச்சின் கீழ் பணியாற்றுவோர் 5 வருட (கல்வியியற் கல்லூரிகளின் உடற்கல்வி ஆசியரிப் பயிலுநர்களுக்கு மாத்திரம் 2 வருடங்கள்) சேவைக்காலத்தினையும் பூர்த்திசெய்திருக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

2. உரிய முறையில் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**2. விண்ணப்பப்படிவங்களை அனுப்பவேண்டிய முறை :**

2.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் போல் 8'' x 13 1/2'' அளவுடைய கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தமது சொந்தக் கையெழுத்தினால் பூர்த்தி செய்து 2014.03.21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு ''பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், இல. 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 7'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

2.2 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமாப் பாடநெறி - 2014/2015'' எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

2.3 அரச, உள்ளூராட்சி சேவை மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் அலுவலர்களினால் அனுப்பப்படும் விண்ணப் பங்கள் குறிப்பிட்ட திணைக்களத்தின்/நிறுவனத்தின் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

2.4 பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 ஐ காசுக் கட்டளையாக ''செயலாளர், விளையாட்டு அமைச்சு'' எனும் பெயருக்கு குருந்துவத்தை தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். மேலும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் ஒட்டி அனுப்பிவைத்தல் வேண்டும்.

**3. தேர்ந்தெடுக்கும் முறை.-** இப்பாடநெறிக்காக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் தகைமை பெற்றுள்ள அனைவரும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவதுடன் ஆட்சேர்ப்புக் குழுவினால் தீர்மானிக்கப்படும் புள்ளிகளைப் பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கும், உடற்றகைமைகாண் செயன்முறைப் பரீட்சை ஒன்றிற்கும் உட்படுத்தப்பட்டதன் பின்னர் பாடநெறிக்காகத் தெரிவுசெய்யப்படுவர்.

**4. பாடநெறி தொடர்பான விபரங்கள் :**

4.1 பாடத்திட்டமானது பின்வரும் 5 பிரிவுகளை உள்ளடக்கிய தாகும் :

(அ) பயிற்றுவித்தலின் பொதுக் கோட்பாடுகள் (உடற்தகைமைகள் மற்றும் திறன்கள், நுட்பமுறைகள், உபாய வழிகள், பயிற்சி முறைகள், திட்டமிடல் முறைகள், பயிற்சிச் சுமை மற்றும் பரீட்சித்தல் தொடர்பான கோட்பாடுகள்) மற்றும் வாய்மொழிமூலப் பரீட்சை.

(ஆ) ஆகக்குறைந்தது 10 விளையாட்டுக்கள் தொடர்பான கோட்பாட்டு மற்றும் செயன்முறை அறிவு.

(இ) சுவட்டு மற்றும் மைதான மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் பற்றிய நிபுணத்துவம்.

(ஈ) சுவட்டு மைதான மெய்வல்லுநர் விளையாட்டுக்களுக்கு மேலதிகமாக விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறிக் காலத்தின்போது பெண்கள் அல்லது ஆண்களின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான விதத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு விளையாட்டு தொடர்பான நிபுணத்துவம் (உதைபந்தாட்டம்/ வொலிபோல்/ வலைப்பந்தாட்டம்).

(உ) விளையாட்டு உடற்றொலிழியல், சமூக விஞ்ஞானம், விளையாட்டு நிர்வாகம், விளையாட்டு புள்ளிவிபரவியல், விளையாட்டு விழாக்களை ஏற்பாடு செய்தல், விளையாட்டு மருத்துவவியல், விளையாட்டு உயிரியல் இரசாயனம், விளையாட்டுப் போசணை மற்றும் விளையாட்டு உளவியல் போன்ற பொது விடயங்கள் பற்றிய கற்கைகள்.

4.2 பாடநெறியின் கால எல்லை 12 மாதங்களாகும்.

4.3 இப்பாடநெறியின் பொருட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பாடநெறிக் கட்டணமாக ரூபா 30,000 ஐ பாடநெறி தொடங்கப்படுவதற்கு முன்னர் செலுத்த வேண்டியதுடன் பாடநெறிக்கான கட்டணத்தினை செலுத்தி நிறைவுசெய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளப்படுவர். அவ்வாறே இப்பணமானது காசோலையாக செலுத்தப்படுமாயின் "செயலாளர், விளையாட்டு அமைச்சு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். மேற்படி பணமானது எக்காரணங்கொண்டும் மீள அளிக்கப்பட மாட்டாது.

4.4 பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்படுவோர் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுவதற்கு கட்டுப்பட்டவராவார்.

4.5 பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்பவர்களுக்கு விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும்.

**5. ஏனைய நிபந்தனைகள் :**

5.1 பாடநெறியின் முடிவில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு இவ்வமைச்சு பணிக்கப்படவில்லை.

5.2 இருப்பினும் பாடநெறியினைப் பயில்பவர்கள் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளருடன் உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொள்ளல் வேண்டுமென இவ்வமைச்சு கருதும் பட்சத்தில் அவ்வுடன்படிக்கைக்கு உடன்படுவதற்கு பாடநெறியைப் பயிலுபவர்கள் கட்டுப்பட வேண்டும் .

5.3 தற்போதுள்ள உயர் தகைமையினை அல்லது கோரப்பட்டுள்ள தகைமையினை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டியதுடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படாத தரவுகள் பின்னர் முன்வைக்கப்படினும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5.4 இங்கு குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் இருக்குமாயின் அவை தொடர்பாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனப் பணிப்பாளரின் அபிப்பிராயத்தின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்.

இல. 100/7, சுதந்திர மாவத்தை,
கொழும்பு 7,
2014, பெப்புருவரி 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

**விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி - 2014/2015**

1. (i) முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(iii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

(iv) தேசிய அடையாள அட்டை இல. :----.

2. முகவரி :
(i) தனிப்பட்ட :----.
(ii) அலுவலகம் :----.

தொலைபேசி இல. :
பிரத்தியேகம் :----.
அலுவலகம் :----.

3. (i) பிறந்த திகதி :
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

(ii) 2013.12.31 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

4. இலங்கைப் பிரசையா இல்லையா என்ற விபரம் :----.
இலங்கைப் பிரசையாயின் பதிவின் மூலமா அல்லது பரம்பரையினாலா என்ற விபரம் :----.

5. (i) பால் (ஆண்/பெண்) :----.
(ii) திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.

6. நீங்கள் தொழில் செய்பவரா ? இல்லையா ? :
(i) சேவை நிலையம் :----.
(ii) தற்பொழுது வகிக்கும் பதவி :----.
(iii) தொழிலில் சேவைக்காலம் :----.

7. பெற்றுள்ள கல்வித் தகைமைகள் :

| வருடம் | பரீட்சையின் பெயர் | விடயம் | பெற்றுள்ள சித்திகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

8. விளையாட்டுத் திறமைகள் (பெற்றுள்ள உயர் சான்றிதழ்கள் மற்றும் விசேட சாதனைகள் பற்றி இங்கு குறிப்பிடவும். தங்களது சான்றிதழ்களின் நிழற்பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைக்கவும்) :----.

9. (i) வர்த்தமானி அறிவித்தலில் உள்ளவாறு நீங்கள் இந்தப் பாடநெறிக்குத் தகுதிபெற பந்தி 1.2 இன் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ) வரையுள்ள எந்தப் பிரிவில் தகுதிபெற்றுள்ளீர்கள் ? :----.

(ii) குறிப்பிட்ட பந்தியின்கீழ் நீங்கள் பெற்றுள்ள தகைமை பற்றிய விபரங்களைத் தருக :----.

10. வேறு குறிப்புகள் :----.

11. குருந்துவத்த தபால் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட, பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட ரூபா 500 இற்கான பற்றுச்சீட்டு இலக்கம் ---- (“செயலாளர், விளையாட்டு அமைச்சு” எனும் பெயருக்கு அனுப்பப்பட வேண்டியதுடன், பற்றுச்சீட்டினை இதனுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

12. இந்தப் பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறிக் கட்டணமான ரூபா 30,000 ஐ செலுத்துவதற்கு நீங்கள் தயாரா என்பது பற்றிய விபரம் :----.

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், சரியானவையெனவும், நான் உறுதிமொழிகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையற்றது அல்லது தவறானது என யாதேனும் விதத்தில் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் இப்பாடநெறியை கற்பதற்கு தகுதியற்றவராகக் கருதப்பட்டு பாடநெறியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

அரச, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனச் சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டும் :

பணிப்பாளர்,

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் :

............... இல் .......................... ஆகக் கடமையாற்றும் திரு./திருமதி/செல்வி ......................... அவர்களது விண்ணப்பப்படிவத்தைச் சிபாரிசு செய்து முன்னிலைப்படுத்துவதுடன் இவ்விண்ணப்பதாரி மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறி நடைபெறும் காலத்திற்கு அவரை பணியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.
பதவி முத்திரை :----.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

2-642

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.